**<u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>**

**<u>MCOP - 14 /2016 C/W MCOP 7/2017 C/W MCOP No.11/2017</u>**

**<u>நாள் – 24.07.2025</u>**

**<u>PW – 1</u>** சிவலிங்கம்

**த/பெ.** குப்புசாமி

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24th day of July 2025)**

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. நான் MCOP 14/2016 மனுவில் மனுதாரர் ஆவேன். MCOP 7/2017 மனுவில் மனுதாரரான ரேவதி எனது மனைவி. MCOP 11/2017 மனுவில் மனுதாரர் மைனர் சபரிவாசன் எனது மகன் ஆவார். விபத்து சமயம் எனது இருசக்கர வாகனத்தில் நானும், எனது மகனும், எனது மனைவியும் மற்றும் எனது மகள் தமிழரசியும் சென்றோம் என்றால் சரிதான். 26.06.2016–ம் தேதியில் விபத்து நடந்தது என்றால் சரிதான். நான் ஓட்டிச்சென்ற எனது வாகனத்தின் பதிவு எண்.TN 29 AR 3918 Yamaha crux ஆகும். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.11 பில்லில் வண்டி வாகனத்தின் பதிவு எண்.TN 39 AR 3918 என்று உள்ளது என்றால் சரிதான், TN 29 என்பதற்கு TN 39 என்று தவறாக டைப் ஆகி உள்ளது. அந்த வா.சா.ஆ.11 பில்லானது விபத்து நடந்து 7 மாதம் கழித்து 05.01.2017–ம் தேதியில் தான் பெறப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த பில்லானது தோராய மதிப்பீடு என்று குறிப்பிட்டு தான் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பில்லில் கண்ட தொகையை நான் கொடுத்ததாக எந்தவொரு விபரமும் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். அதனால் வா.சா.ஆ.11

ஆனது சட்டப்படி ஏற்கக்கூடியதல்ல என்றும், அதில் கண்ட தொகையை நான் கோர முடியாது என்று சொன்னால் சரியல்ல.

2. நான் தறிக்குடோன் வைத்து நடத்தி வருகிறேன் என்பதை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், வாடகைக்கு எடுத்து நடத்தி வருகிறேன். எனக்கு மாதம் ரூ.20,000/– வருமானம் வருகிறது என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், தேவைப்பட்டால் பின்னிட்டு தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். விபத்து சமயம் எனது வாகனத்திற்கு காப்பீடு செய்யப்படவில்லை என்றால் சரிதான். அதேபோல் விபத்து சமயம் நாங்கள் தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரியல்ல. எனது வாகனத்தில் 4 பேர் சென்றதால் தான் என்னால் வாகனத்தை கட்டுப்படுத்த முடியாமல் ஓட்டிச்சென்று எதிரே வந்த வாகனத்தின் மீது மோதி வலிய விபத்தை ஏற்படுத்திக்கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள என்னுடைய காயச்சான்றிதழ் ம.சா.ஆ.6 எனக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்று தான் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, எனக்கு எலும்பு முறிவு ஏற்பட்டு தருமபுரி பக்கம் உள்ள நல்லாம்பட்டியில் கட்டு போட்டேன். இந்த வழக்கிற்காக வேண்டி மருத்துவ பில்களை அதிக தொகைக்கு வாங்கி கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எங்கள் மீது மோதியதாக சொல்லப்படும் டாடா ஏசி வாகனத்தை ஓட்டி வந்த ஓட்டுநருக்கு Batch கிடையாது என்பதால் எனக்கு இழப்பீடு வழங்க காப்பீட்டு நிறுவனம் கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. அதனால் இந்த மனுக்கள் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :-** இல்லை.

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.07.24 18:39:55 -0100

**Subordinate Judge,**
**Avinashi.**